1975 அக்டோபர் 29]

மதுரை பேருந்து நிலையம்

*122 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். மதுரை மாநகராட்சியின் ஆய்விலுள்ளது.

திரு. கு. திருப்பதி: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் டௌன் ஹாலுக்காக கொஞ்சம் இடத்தை ஒதுக்கி விட்டு, மீதியை பஸ் ஸ்டாண்டுக்குக் கொடுக்க ஒரு ஏற்பாடு இருந்தது. அதேபோல்தான் இருக்கிறதா அல்லது அந்த இடம் முழுவதும் பஸ் ஸ்டாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது மதுரை பேருந்து நிலயத்திற்கு அரசிடத்தில் உள்ள நிலத்தை மாநகராட்சி பெற்றுக் கொண்டிருக்கிற ஒரு பிரச்னையாகும். அது முழுவதும் பேருந்து நிலயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பீமநகரி சாலை

* 123 வினா—திரு. வீ. கே. இராஜப்பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள "பீமநகரி" சாலையை செப்பனிடும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பீமநகரி சாலையை செப்பனிடும் வேலைகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

அரிசன மாணவர் விடுதிகள்

*124 வினா—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் வட்டம், வட சென்னிமலையில் ஒரு அரிசன மாணவரில்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?